# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# (EXTERNAL DEGREE)
## Part III (4th) Examination in Bachelor of Economics-2009/10
## (July 2013)
## EXEOC 4073 Development problems and policies

23 AUG 2013
UNIVERSITY, SRI LANKA

எல்லா வினாக்களுக்கும் விடை தருக   நேரம் – 03 மணித்தியாலங்கள்

---

1. (அ) கடந்த காலங்களில் பல்வேறு குறைவிருத்தி நாடுகளில் உயர்ந்த வீத பொருளாதாரவளர்ச்சி காணப்பட்ட போதிலும் வறுமை என்பது ஏன் இன்னும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சனையாகக் காணப்படுகிறது? காரணங்கள் தந்து விளக்குக.
(04 புள்ளிகள்)

(ஆ) குறைவிருத்தி நாடுகளில் வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? ஆலோசனை வழங்குக.
(08 புள்ளிகள்)

(இ) லோரன்ஸ் வளையி எதனைக்காட்டி நிற்கிறது? வரைபடம் தந்து விளக்குக.
(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (அ) வேகமான சனத்தொகை வளர்ச்சியானது மக்களின் நல்வாழ்வில் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்துகிறது? விளக்குக
(04 புள்ளிகள்)

(ஆ) "அதிகரித்துச் செல்லும் சனத்தொகை வளர்ச்சியானது குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகும்" ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தந்து விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகை நிலைமாற்றம் (Demographic transition) பற்றிய விளக்கத்தை வரைபட உதவியுடன் தருக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (அ) குறைவிருத்தி நாடுகளில் ஊழியமானது முழு அளவில் பயன்படுத்தப் படாமல் இருக்கின்ற (underutilization) ஐந்து சந்தர்ப்பங்களை சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) விருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் வேலையின்மை தொடர்பாக பின்வருவனவற்றை விளக்குக.

I. கல்வி கற்றோரிடையே வேலையின்மை.
II. பெண்களிடையே வேலையின்மை.
III. இளைஞர்களிடையே வேலையின்மை.

(12 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (அ) பேண்தகுதன்மை (Sustainability) என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

(ஆ) Peace,Watford என்பவர்களால் முன்வைக்கப்பட்ட சுற்றுச்சூழல் கணக்கீட்டினை (Enviromental Accounting) சுருக்கமாகத் தருக

(08 புள்ளிகள்)

(இ) சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது தொடர்பாக விருத்தியடைந்த நாடுகள், விருத்தியடைந்து வரும் நாடுகள் என்பன எவ்வாறு செயற்பட முடியும் என்று நீர் கருதுகிறீர்?

**(08 புள்ளிகள்)**

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு தருக

(அ) கினி குணகம்.
(ஆ) வறுமை இடைவெளி
(இ) சனத்தொகையின் வயதுக்கட்டமைப்பும் தங்கியிருப்போர் சுமையும்
(ஈ) நகர அபிவிருத்தியும் சுற்றுச்சூழல் பாதிப்பும்

(மொத்தம் 20 புள்ளிகள்)